**செய்தி வெளியீடு எண்.134** **நாள்.26.02.2026**

**தஞ்சாவூர் மாவட்டம்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள மாசிமகத் திருவிழாவை முன்னிட்டு 02.03.2026 (திங்கட்கிழமை) **அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அறிவித்து ஆணையிடப்படுகிறது.** இந்த உள்ளூர் விடுமுறை நாளுக்கு பதிலாக 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் தேதி (14.03.2026) **சனிக்கிழமை தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து** அரசு அலுவலகங்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் பணி நாளாக அறிவிக்கப்படுகிறது.

**மேலும், உள்ளூர் விடுமுறை நாளன்று** (02.03.2026) **பன்னிரெண்டாம் வகுப்பு பொது தேர்வுகள் வழக்கம்போல் நடைபெறும்.**

இந்த உள்ளூர் விடுமுறை செலவாணி முறிச் சட்டம் 1881-இன் கீழ் வராது என்பதால் தஞ்சாவூர் மாவட்ட கருவூலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை கருவூலங்களும் குறிப்பிட்ட பணியாளர்களுடன் இயங்கும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்**